படிவம் எண்.1

# தேர்தல் அறிவிப்பு

(தேர்தல் நடத்துவதற்குரிய விதிகள் 1961–இன் விதி 3–ஐ காண்க)

## மாநிலங்களவைக்கு நடைபெறும் தேர்தல்

(2.4.2008 ஆம் நாளன்று 6 உறுப்பினர்களது பதவிக்காலம் நிறைவு பெற்று அவ்வுறுப்பினர்கள் ஓய்வு பெறுவதால் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக)

இதனால் அறிவிக்கப்படுவது யாதெனில் :–

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் (தேர்ந்தெடுக்கப்பட்ட) உறுப்பினர்களை வாக்காளர்களாகக் கொண்டு மாநிலங்களவைக்கு 6 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெற இருக்கிறது.

2. வேட்பாளர் அல்லது அவருடைய பெயரை முன்மொழிபவர்களில் ஒருவர், திரு. மா. செல்வராஜ், தேர்தல் நடத்தும் அதிகாரி மற்றும் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் அல்லது திரு. தி.கோவிந்தராசு, தேர்தல் நடத்தும் உதவி அதிகாரி மற்றும் சட்டமன்றப் பேரவைத் துணைச் செயலாளரிடம், சென்னை 600 009, சட்டமன்றப் பேரவைச் செயலகத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் (அரசு விடுமுறையல்லாத) எந்நாளிலும் காலை 11.00 மணி முதல் மாலை 3.00 மணிக்குள்ளாக 15.3.2008–ஆம் நாளுக்கு மேற்படாதவாறு வேட்பு மனுக்களை அளிக்கலாம்.

3. மேலே குறிப்பிடப்பெற்ற இடத்திலும், நேரத்திலும், வேட்பு மனு படிவங்கள் கிடைக்கும்.

4. வேட்பு மனுக்கள் சென்னை 600 009, சட்டமன்றப் பேரவைச் செயலகத்தின் செயலாளர் அலுவலகத்தில் 17.03.2008–ஆம் நாளன்று காலை 11.00 மணியளவில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

5. வேட்பாளர் அல்லது அவரது பெயரை முன்மொழிபவர்களில் ஒருவர் அல்லது வேட்பாளரால் எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அவரது தேர்தல் முகவர் (வேட்பாளர்) விலகல் அறிவிப்பை மேலே பத்தி 2–இல் குறிப்பிட்டுள்ள அதிகாரிகள் எவரிடத்திலேனும் அவரது அலுவலகத்தில் 19.03.2008–ஆம் தேதியன்று மாலை 3.00 மணிக்குள் அளிக்கலாம்.

6. தேர்தலில் போட்டி இருப்பின், 26.03.2008 ஆம் நாளன்று காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையில் வாக்குப் பதிவு நடைபெறும்.

இடம் : சென்னை 600 009
நாள் : 08.03.2008

(மா. செல்வராஜ்)
தேர்தல் நடத்தும் அதிகாரி
மற்றும் செயலாளர்
சட்டமன்றப் பேரவைச் செயலகம்

# சட்டமன்றப் பேரவைச் செயலகம்

## செய்திக் குறிப்பு

15.3.2008 ஆம் நாள், சனிக்கிழமை அரசு விடுமுறை நாளாக இருப்பினும், மாநிலங்களவைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் அன்று காலை 11.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை தேர்தல் நடத்தும் அதிகாரி அல்லது தேர்தல் நடத்தும் உதவி அதிகாரியால் பெற்றுக்கொள்ளப்படும்.

மா.செல்வராஜ்
தேர்தல் நடத்தும் அதிகாரி
மற்றும் செயலாளர்,
சட்டமன்றப் பேரவைச் செயலகம்

சென்னை 600 009
8.3.2008